★ யாழ் மாவட்டத்தில் 1983 முதல் 1990 வரை இராணுவ நடவடிக்கையால்

# 10ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்
# 4061 குடும்பங்களே நஷ்டஈடு கோரியுள்ளன

இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன், ஒன்பதினாயிரத்திற்கும் அதிகமானோர் மோசமாகக் காயமடைந்து உடல் ஊனமுற்றுள்ளார்கள். 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 24 ஆம் திகதிக்குப்பின்னர், இவ்வளவு தொகையினர் பாதிப்படைந்திருந்தும் இறந்தவர்களுக்கான நஷ்ட ஈடு கோரி இதுவரை 4061 பேரின் விண்ணப்பங்களும், உடல் ஊனமுற்றவர்களின் 1300 விண்ணப்பங்களுமே யாழ் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவுக்குக் கிடைத்துள்ளது. இறப்புக்களை உரியகாலப்பகுதியில் பதிவுசெய்யாமையும், குடும்பத்தலைவனை இழந்த பெண்களில் பலருக்கு திருமணப் பதிவு இன்மையாலும், இவ்வாறான விண்ணப்பங்களை யாரிடமிருந்து பெற்று யாருக்கு அனுப்பிவைப்பது போன்ற விபரங்கள் தெரியாததாலும் அநேகர் இதற்காக விண்ணப்பிக்க முடியாதுள்ளனர். இறந்தவர்களில் 1821 பேருக்கும் மோசமான நிலையில் காயமடைந்து அவயவங்கள் இழப்புக்குள்ளானவர்களில் 310 பேருக்கும் இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கான கொடுப்பனவுகளும் விரைவில் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை இந்த வருடம் ஆனி மாதத்தின் பின்னர் இவ்வாறு இறந்தவர்களில் 500 க்கும் அதிகமானவர்களின் விண்ணப்பங்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4.5)

# முரசொலி

முரசு 05 ஒலி 22 பிரமோதூத மார்கழி 04 (19-12-1990) புதன்

## மாங்குளத்தில் திருத்தவேலைகள் இல்லை
## வடபகுதிக்கு மின்சாரம் கிடைக்காது

மாங்குளத்தில் துண்டிக்கப்பட்டுள்ள 132 கே. வி. மின் இணைப்பை மீண்டும் சீர் செய்து வடபகுதிக்கான மின் விநியோகத்தை வழங்குவதற்கு மின்சாரசபை அக்கறையின்றிஇருப்பதாகவும்இதனால்வடபகுதிக்குமின்சாரம்இனிமேல்கிடைக்கமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது மாங்குளம் முகாம் தாக்குதலின் பின்னர் தற்பொழுது அப்பகுதியில் அமைதி நிலவுகின்றது. மாங்குளத்தில் இராணுவமுகாம் இருந்த வேளை மூடப்பட்டிருந்த கண்டிவீதி, விடுதலைப்புலிகளினால் பொறிவெடிகள் அகற்றப்பட்டு தற்பொழுது பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச்சட்டமும் நீக்கப்பட்டு பல நாட்களாகி விட்டது எனினும் மின் இணைப்புக்களை மீண்டும் சீர் செய்வதற்கான நடவடிக்கை எதனையும் மின்சாரசபை இதுவரை எடுக்கவில்லையாம்.

—04 ஆம் பக்கம் பார்க்க

பன்குளம் முகாமுக்குச் செல்லும் வழியில்

# திருமலை ராணுவத் தளபதி
# கண்ணிவெடியில் சிக்கிப்பலி!

## சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன் உட்பட இரு அதிகரிகளும் உயிரிழப்பு

நேற்று விடுதலைப்புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் திருகோணமலை ஸ்ரீலங்கா இராணுவப் பொறுப்பதிகாரியும் தளபதியுமான பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரட்ன ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் திருமலை மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளம் இராணுவ முகாமில் இருந்து பன்குளம் இராணுவ முகாமிற்குச் சென்றுகொண்டிருந்த இரண்டு இராணுவ ஜீப் வண்டிகள் மீது புலிகள் பன்மதவாச்சியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதலை நடாத்தினர்.

இத் தாக்குதலினால் ஜீப்பில் பயணம் செய்துகொண்டிருந்த திருமலை மாவட்டத்திற்கான ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரட்ன ஸ்தலத்திலேயே பலியானார்.

இவருடன் ஜீப்பில் இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரிச்சேர்ட் விஜேசேகர உட்பட மேலும் இரு சிரேஷ்ட படை அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து பன்மதவாச்சியில் ஒரு அவ்ரோ விமானம், இரு குண்டு வீச்சு விமானங்கள் என்பன கடும் ஆகாயத் தாக்குதலை இங்குள்ள காட்டுப்பகுதியில் நடாத்தின.

நேற்றைய தாக்குதலில் பலியான பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரட்ன மிகவும் மூத்த இராணுவ அதிகாரி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (71)

சீனப்பிரதமரிடம்

## இந்திய உறவு நிலைபற்றி பிரேமதாஸ விளக்கம்

இந்தியாவுடனான ஸ்ரீலங்காவின் உறவுகள் பற்றியும் சீனா ஸ்ரீலங்கா தலைவர்கள் ஆராய்ந்ததாக நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இக்கட்டத்தில் ஜனாதிபதி திரு ரணசிங்க பிரேமதாஸ இந்தியாவுடனான உத்தேச நட்புறவு உடன்படிக்கை பற்றியும், தமிழ்நாட்டில் இலங்கைப்போராளிகளின் நடமாட்டம் குறித்தும் சீனப்பிரதமருக்கு விளக்கிக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யூ. என். எச். சி. ஆர். ஊடாக

## வடகிழக்கு அகதிகளுக்கு இந்தியா பணம், பொருள் உதவி

வடக்குக் கிழக்கில் இடம் பெயர்ந்து அகதிகளான தமிழ் மக்களுக்கு இந்திய அரசு பொருளாகவும், பணமாகவும் உதவி வழங்கவுள்ளதாக நேற்று அறிவித்தது.

அகதிகளுக்கு வழங்கவென ஆறுலட்சத்து எண்பத்தையாயிரம் டொலர் பெறுமதியான பொருட்களையும் ஒரு லட்சம் டொலர் பணமாகவும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் இவ்வுதவி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் மூலம் இந்தியாவில் இருந்து அனுப்பப்படவுள்ளது.

காரைநகர்-சாந்திபுரத்தில்

## சேதமான கட்டிடங்கள் குண்டு வைத்து தகர்க்கப் படுகிறது

காரைநகர் சிநோர் கட்டிடத்தில் உள்ள இராணுவத்
னர்.
மாலை வேளைகளில் கடற்

## உணவு லொறிகள் வருகின்றன விலையில் வீழ்ச்சி ஏற்படும்

கொழும்பு வவுனியா ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்
இதனால் யாழ் குடாநாட்டில் நேற்று அரிசி ஒரு கிலோ

## வடக்குக் கிழக்கில் விரைவில் கல்வி அதிகாரிகள் இடமாற்றம்?

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் ஜனவரி மாதத்தில் இருந்து கல்வி அதிகாரிகளுக்கிடையேயான
தெரியவந்துள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்

## குண்டு வைத்து தகர்க்கப் படுகிறது

காரைநகர் சிநோர் கட்டிடத்தில் உள்ள இராணுவத்தினர் தம் முகாமுக்கு அருகில் உள்ள சாந்திபுரம் பகுதியில் சில கட்டிடங்களையும் பொம்பர் தாக்குதலால் சேதமடைந்து எஞ்சியுள்ள கட்டிடத் தொகுதிகளையும் குண்டு வைத்துத் தகர்த்து வருகின்றனர்.

மாலை வேளைகளில் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளும் அதேவேளை, வியாவில் கடற்பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றனர்.(ப 31)

## விலையில் வீழ்ச்சி ஏற்படும்

கொழும்பு வவுனியா ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், வவுனியாவில் இராணுவத்தின் கெடுபிடிகளும் சற்றுக் குறைந்ததையடுத்தும் நேற்று முதல் அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் லொறிகள் மூலம் வரத் தொடங்கியுள்ளன.

இதனால் யாழ் குடாநாட்டில் நேற்று அரிசி ஒரு கிலோ 28 ரூபாவும் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும் இவ்வாரத்தில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி அடையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (33

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் ஜனவரி மாதத்தில் இருந்து கல்வி அதிகாரிகளுக்கிடையேயான பொதுவான மாற்றம் ஒன்று செய்யப்படவுள்ளதாக அறிய வந்துள்ளது கோட்டக்கல்வித் திணைக்களங்களுக்கான பிரதம கல்வி அதிகாரிகளுக்கிடையேயும். கல்வி அதிகாரிகளுக்கிடையேயும் இம்மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அடுத்தவருட ஆரம்பத்துடன் ஓய்வுபெறவுள்ளதால் இப்பதவிக்கு மூத்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும்.

—04 ஆம் பக்கம் பார்க்க

# வயலில் வேலை செய்தவர் மீது இராணுவம் சுட்டு நால்வர் பலி

கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின போது சேமமடு என்னும் கிராமத்தில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நால்வர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

காரைநகர் மூக்கம்பிட்டியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சறோஜாதேவி (27) என்னும் குடும்பப்பெண்ணும், உட்பட நால்வருமே இவ்வாறு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களாவர். (ப-31)

# மில்க்வூட்ஸ் கம்பனி மோசடி அரசியல் வாதி மீது விசாரணை

ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடிதொடர்பாககொழும்பில் உள்ள அரசியல்வாதி ஒருவர் இரகசிய பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

லங்கா மில்க்வூடஸ் நிறுவனத்துக்கு காற்றுப்புகாத வெள்ளிப்பேப்பர் பை வழங்கியது தொடர்பாக இவரிடமிருந்து வாக்கு மூலம் பெறப் பட்டது.

தனது உறவினரிடமிருந்து பெறப்பட்ட தரமற்ற இந்தப் பையை இவர்வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

### ஐப்பசி, கார்த்திகை ,மார்கழி மாதங்களுக்குரிய

# பென்சன வவுச்சர்கள்,பணம் யாழ் கச்சேரிக்கு வரவில்லை

இளைப்பாற்றுச் சம்பளம் வழங்க ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதத்திற்கான வவுச்சர்களோ அதற்குரிய பணமோ இன்னும் யாழ் செயலகத்திற்குக் கிடைக்கவில்லை.

இந்த வவுச்சர்கள் கொழும்பில் தயார் நிலையில் இருந்தும், கப்பல் போக்குவரத்து சீரின்மையால் இங்கு கொண்டு வர முடியாதுள்ளது.

இதேவேளை இக்கொடுப்பனவுக்கான கட்டுநிதியும் இன்னும் வந்து சேரவில்லை. பணமாக வழங்க 10 கோடி ரூபாவும் தேவையென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கசிப்பு வேட்டை

ஏழாலை மத்தியில் அமைந்துள்ள அம்மன் கோவிலுக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை மூன்று வீடுகளில் கசிப்பு வேட்டை நடாத்தப் பட்டது.

மல்லாகம் பிரதேச பொறுப்பாளரின் உதவியுடன் அப்பகுதி வாழ் பல இளைஞர்கள் இதனை நடாத்தினர்.

பல கொள்கலன்களில் காணப்பட்ட கசிப்பு தரையில் ஊற்றப்பட்டன. (ப-33)

### 2- வது கட்ட விசேட நிவாரணம் இன்று ஆரம்பம்

# ஒரு பொருளுக்குப் பதிலாக வேறு பொருள் வழங்கக்கூடாது என்கிறார் உணவு அதிகாரி

இன்று முதல் யாழ் மாவட்டத்திலுள்ள சகல ப.நோ கூ. சங்கக் கிளைகளிலும் விசேட இலவச இரண்டாம் வாரத்திற்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பங்கீட்டு அளவுகளில் எந்த மாற்றமும் இல்லை என உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். ஐ நித்தியராஜ் தெரிவித்துள்ளார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும்

# பதிவு செய்தல்-1991

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 டிசம்பர் 31-ம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

1. எழுதுபொருட்கள்
2. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலகதளபாடம்—மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோகொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சகலவகை ஹாட்வெயார் பெயிண்டுகள், வார்னிஷ்
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சாரசாதனமும், உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருட்களும் கண்ணாடிபபொருட்களும்
12. மரம்
13. கட்டிடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள். பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரிப் பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மட்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள்ளுறுப்புக்கள்

### சேவைகள்

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
3. றிபிறியேட்டர்கள், எயர் கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புக்களும்
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்தவேலைகள்
5. மரத்தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
6. கதிரைகள் பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

### பொறியியல் சேவைகள்

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. எலக்றிக் மோட்டர்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் பொறியியல் வேலைகள் (கட்டிடங்கள் நிருமாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. எலக்றிக்கல் வயறிங்
5. நீர் விநியோக சுகாதார தாபித்தல் வேலைகளும் திருத்த வேலைகளும், குழாய் வளைத்தல் வேலைகளும்
6. இரும்பு கிறில்கள், கேற்றுக்கள் உருவமைத்தலும் தாபித்தலும்
8. கட்டிடங்கள்/கட்டிட சேவைகளுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையான மரத்தளபாடங்களை வழங்குதலும், பொருத்துதலும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள் / சேவைகள் - 1991'

---

வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு இராணுவ நடவடிக்கையால்

# 6 மாதத்தில் 40 கோடி ரூபா நஷ்டம்!

## சேவையை ஆரம்பிக்க 260 பஸ்கள் தேவை

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த ஆறுமாதங்களில் மட்டும் 40 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வட பிராந் ய போக்குவரத்துச்சபை வட்டாரங்கள் நேற்று முரசொலிக்கு இத் தகவலைத் தெரிவித்தன.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் உள்ள ஏழு டிப்போக்களிலும் கடந்த ஜூன் மாதம் மோதல்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் 170 பஸ்சள் ஓடக்கூடிய நிலையிலிருந்தன.

மீண்டும் நிலைமை சீரடையும் போது இந்த ஏழு டிப்போக்களும் திருப்தியான சேவையை வழங்குவதற்கு குறைந்தது 260 பஸ்களாவது தேவையெனவும் தெரிவிககப்பட்டது.

இவ்வாறு பஸ்கள் வழங்கப்பட்டால் நாளாந்தம் இரண்டு லட்சம் ரூபா வீதம் மாதமொன்றுக்கு 60 லட்சம் ரூபாவைப் பெறக்கூடியதாக இருககுமெனவும் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11)

## புகையிலைச் செய்கை பாதிப்பு மரக்கறிச்செய்கையில் ஆர்வம்

வடமராட்சிப் பகுதியில் இம்முறை புகையிலைச் செய்கை மிகக் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்குப்பதிலாக வெங்காயம், மிளகாய் என்பவற்றுடன் ஏனைய மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதுவரை காலமும் இப்பகுதி விவசாயிகள் பணப்பயிராக புகையிலை, வெங்காயம் ஆகிய பயிர்களை மிகக் கூடுதலாகப்பயிரிட்டு வந்தனர். ஆனால் தற்போதைய யுத்தச்சூழ்நிலையால் விவசாயிகள் புகையிலைச் செய்கையில் அதிகம் அக்கறைகாட்டாது வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை பிரதான பயிர்களாகவும் மரக்கறிவகைகளை உபபயிராகவும் பயிரிட்டு வருகின்றனர்.

இதேவேளை, இப்பகுதியில் ஏற்கனவே பயிரிடப்பட்டு அறுவடை செய்த புகையிலை பதப்படுத்தப்பட்ட நிலையில் வருடக்கணக்காக இப்பகுதி விவசாயிகளிடம் விற்பனையாகாமல் கையிருப்பில் இருந்து வருகிறது. (50)

## தேவையோ அதிகம் கப்பலில் இங்கு வருவதோ குறைவு

யாழ் மாவட்ட இலங்கை வங்கி உத்தியோகஸ்தர்களுக்கு வேதனம் வழங்கவும், ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்கவும் மாதாந்தம் 165 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என மாவட்ட வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

இதில் இம்முறை கப்பலில் அனுப்பப்பட்ட 2 கோடியே 50 லட்சம் ரூபா செயலகத்திற்கும் குறிப்பிட்ட சில வங்கிகளுக்கும் திணைக்களங்களுக்குமே ஒதுக்கப்பட்டுள்ளது என்வும் அவர் தெரிவித்தார். (ப-11)

## 'ஹண்டி' மகான்

ஆழக் கற்றுத் தேர்ந்தவன் அறிஞனாக வாழ்ந்தவன்
அன்பு கொண்ட நெஞ்சினால் அனைவரையும் சேர்த்தவன்
வாழத் துடித்த மக்கள் மீது வாஞ்சை கொண்டு வாழ்ந்தவன்
வள்ளல் போல மனமிரங்கி வாழ்வில் ஒளி சேர்த்தவன்

காந்திமகான் கொள்கைமீது கருணைகொண்டு வாழ்ந்தவன்
காந்தியத்தில் காதல் கொண்டு காதல் மன்னனானவன்
சாந்தி சாந்தி என்று சொல்லிச் சமரசத்தைக் கண்டவன்
சன்மார்க்கவழி சாய்ந்துநின்று சத்தியத்தைச் சார்ந்தவன்

இளைஞர் பேரில் இயக்கமொன்றை இயக்கிவைத்த பெருமகன்
இளைஞர் சபை ஏறக்கண்டு இன்பநிலை கொண்டவர்
களை பிடுங்கி பயிர்வளர்க்கும் உழவனாக நின்றவர்
கன்னித் தமிழ்ப் போதனைக்குக் கருவியாக நின்றவர்

ஆக்கம்: ஆ. கல்யாணசுந்தரேசன்
மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை

குறிப்பு:- ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்தக் குழுவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியும் இணைந்து இன்று நடாத்தும் ஹன்டி நினைவுநாளையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.

சிறு விளம்பரம்

போட்டோஸ்ரற்

8. கட்டிடங்கள் / கட்டிட சேவைகளுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையான மரத்தளபாடங்களை வழங்குதலும், பொருத்துதலும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள் / சேவைகள் - 1991' எனக் குறிப்பிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் பொருளாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150 /- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலைமனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
(2) பெயரும் விலாசமும்
(3) தொலைபேசி இலக்கம்
(4) வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
(5) வியாபாரத்தின் தன்மை
(6) வங்கியாளர்களின் பெயர்
(7) கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்

குறிப்பு : பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து மேலதிக தகவல்கள் கோரப்படும்.

(8) பொருட்கள் 3 ஐப் பொறுத்தவரையில் பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

(அ) ICTAD சிஸ்டத்தின் கீழ் கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோ பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

(ஆ) இலங்கை கட்டிடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள அல்லது கட்டிடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் கடிதம் வைத்திருப்பவர்கள் (கட்டிடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(இ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ரூபா 50,000 /-மும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு ஏதாவது ஒற்றை குடிசார் / கட்டிட வேலையை செய்து முடித்தவர்கள் சம்பந்தப்பட்ட படிவம் ICTAD / ID/ 02 (பிரதி)யையும் ICTAD/ ID/ 01 யையும் ICTAD, 123, விஜயராம மாவத்தை, கொழும்பு -7 என்ற முகவரியிலிருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(9) உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலைசெய்யும் சகல பொருட் பொறியியலாளர்கள் கட்டிடக் கலைஞர்கள் ஆகியோரின் பெயர். அனுபவங்களை (பொருட்கள் 3 & 7 ற்கு மட்டும்) தருக.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

12116


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12115

## போட்டோஸ்ரற்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். காலை 9.00 மணி முதல் மாலை 4,00 மணிவரை

★ "ஸ்கைலைன்ஸ்" ★

281 B, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

★ 'SKYLINES' ★

281 B, Clock Tower Road, Jaffna.
(ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை)

12108

## திலீபனின் தியாக உடல்

### ஊறின்றி பேழையில் உறங்குகிறது

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் சடலங்களை சுமார் 150 வருடகாலம் பழுதடையாமல் பேணிப்பாதுகாக்கக் கூடிய வசதியிருப்பதாக மருத்துவபீட வட்டாரங்கள் தெரிவித்தன.

நீராகாரம் எதுவுமேயின்றி உண்ணா விரதமிருந்து இறந்த தியாகி திலீபனின் சடலம் தற்பொழுது மருத்துவபீட ஆய்வு கூடத்தில் பேணிப்பாதுகாக்கப் படடுவருகின்றது.

1987-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் திகதி தியாக மரணமெய்திய தியாகி திலீபனின் உடல் விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசாவினால் யாழ் மருத்துவ பீடத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது

போமலின் அடங்கிய கண்ணாடிப்பெட்டியொன்றினுள் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் திலீபனின் சடலம் அவர் மரணித்த வேளை இருந்த உருவ அமைப்பு மாறுபடாமல் காணப்படுகின்றது

வளலாயில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் திலீபன் பெற்ற வீரத்தழும்பையும் அவரது உடலில் அவதானிக்க முடிகின்றது. (ப-11)

'முரசொலி' செய்தி ஊர்ஜிதம்; லீபெங்குடன் முக்கிய பேச்சு:

# ஸ்ரீலங்கா படைக்கு ஆயுதங்கள்!

## சீனா வழங்குமென அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

ஸ்ரீலங்காவுக்கு எந்தெந்த ஆயுதங்கள் தேவையோ அவற்றை வழங்க சீனா தயாராக இருக்கிறது என்று பாதுகாப்புத்துறை ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறியுள்ளதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை சீனாவின் இராணுவ உதவிக்குத் தாம் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சீனப் பிரதமர் லீ பெங்குடன் கொழும்பில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது ஆயுத விற்பனை பற்றி பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

### ரூபா. 20 கோடி வட்டியில்லாக்கடன்

மேலும் வரும் ஐந்து வருடங்களில் 20 கோடி ரூபாவை வட்டியில்லாக் கடனகா ஸ்ரீலங்காவுக்கு வழங்கவும் சீனா முன்வந்துள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ஆயுதங்களைத் தானாகவே தயாரிக்கவும் சீனா உதவியளிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, ஸ்ரீலங்காவில் தமிழீழம் கோரிப் போராடும் விடுதலைப்புலிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசுக்கு ஆயுதம் விற்பனை செய்ய சீனா முன்வந்திருப்பதனையடுத்து சீனப்பிரதமரின் மூன்றுநாள் ஸ்ரீலங்கா விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப் படுவதாக மேற்படி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

சீனப்பிரதமரிடம் ஸ்ரீலங்கா அரசு பெருமளவில் ஆயுத உதவியையும் கோரலாம் என்று 'முரசொலி' கடந்த 17-ம் திகதிய தன் பதிப்பில் செய்தி வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியிலிருந்து இலங்கையர் வெளியேறுகிறார்கள்

# சுவிஸ் அரசுக்கு பெரும் நெருக்கடி!

மேற்கு ஜேர்மனியிலிருந்து பல இலங்கையர்கள் வெளியேறி அண்டை நாடுகளை நோக்கிச் செல்வதுடன் மேலும் பலர் வெளியேறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு வெளியேறும் பல இலங்கையர் தெற்கு பேர்லினூடாகப் புகையிரதம் மூலம் அண்டை நாடான சுவிற்சர்லாந்தை நோக்கி அதிகளவில் படையெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு நாற்பதினாயிரம் ரூபா வரை செலவாகிறதாம்.

வசதியுள்ள சிலர் அங்கிருந்து கனடா போன்ற நாடுகளுக்குப் பெருமளவு பணத்தைச் செலவழித்துச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இவர்களது வருகையால் ஏற்கனவே சுவிஸிற்குச் சென்று இதுவரை வேலை கிடைக்காதோர் பட்டியல் மேலும் நீளலாம் என்றும், அதேவேளை சுவிஸ் அரசாங்கமும் குடிவரவுக் கட்டுப்பாடுகளைக் கடுமையாகப் பிரயோகிக்கலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய ஜேர்மன் உருவாக்கப்பட்ட பின்னர் கிழக்கு ஜேர்மனிலிருந்து பெருமளவு வேலைப்படையினர் மேற்கு ஜேர்மனுக்கு வந்துள்ளமையும், அதன் காரணமாக ஏனைய நாட்டு அகதிகளுக்கு வேலையை வழங்காது, அதற்குப் பதிலாக அகதி முகாம்களில் அவர்களைப் பேணுவது என்ற ஒரு கருத்து அரசாங்க மட்டத்தில் காணப்படுவதாகவும் வெளிவந்த செய்திகளையடுத்தே இவர்கள் இவ்வாறு வெளியேறத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-2)

கிரியல்ல எம். பி:

## 'ரஞ்சனின காலம் முடிந்துவிட்டது'

''பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் தலைமுடி நரைத்துவிட்டது. அவரின் காலம் முடிந்துவிட்டது'' என்று பாராளுமன்றத்தில் கிரியல்ல எம். பி. திரு லஷ்மன் குறிப்பிட்டார்.

''புலிகளின் பலத்தை அரசு குறைத்து மதிப்பிட்டுவிட்டது'' என்று அவர் அரசைக் குறை கூறினார். ''புதிய அரசு ஒன்றினால் தான் வட,கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்'' என்றும் அவர் சொன்னார்.

தென்பகுதி மருத்துவ பீடங்களுக்கு

## 380 யாழ் மாணவர் விண்ணப்பம்: ஆனால் 107 பேருக்கே அங்கு அனுமதி

யாழ் பல்கலைக் கழக மருத்துவபீடத்துறை தற்போதைய நெருக்கடியான காலகட்டத்திலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. குறிப்பிட்டுச்சொல்வதானால் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடச் செயற்பாட்டை விட எமது யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீட பேராசிரியர் டாக்டர் பாலசுப்பிரமணியம் நேற்று இத்தகவலை முரசொலிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இம் மருத்துவபீடத்தில் இருந்து 380 மாணவர்கள் கொழும்பிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு கடந்த காலங்களில் விண்ணப்பித்திருந்தனர்.

இதில் வட கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு 100 பேரும், பேராதனை மருத்துவக் கல்லூரிக்கு 7 பேரும் தெரிவாகினர். மிகுதியான மருத்துவபீட மாணவர்கள் இங்கேயே தொடர்ந்து கல்வியைத் தொடர திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந் நிலைமையினால் தற்போது நடைபெறவிருந்த 3-ம் ஆண்டு மருத்துவபீடப் பரீட்சை ஜனவரி முதலாம் வாரத்திற்கும், 2-ம் ஆண்டு மருத்துவமாணவர்களுக்கான பரீட்சை ஜனவரி மூன்றாம் வாரத்திற்கும் பின்போடப் பட்டுள்ளனஎனவும் அவர் தெரிவித்தார். (ப-11)

### கடற்றொழிலாளர் சங்கம் அமைப்பு

கடற்றொழிலாளர்கள் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தினால் தொழில் செய்ய முடியாது பாதிக்கப் பட்டுள்ளதை அடுத்து அவர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையைச் சமுதாய ரீதியில் வெளிக்காட்டும் முகமாகச் சுழிபுரம் காளுவன் பகுதி கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலாளர் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இச் சங்கம் இன்றைய சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளரின் அன்றாட வயிற்றுப்பாட்டினைப் போக்குவதற்கும்

கொடிகாமம் பிரதேசத்தில்

## பொருட்களுக்கு உச்சவிலைநிர்ணயம்

# மீறினால் 1000 ரூபா தண்டம்

கொடிகாமம் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு விடுதலைப் புலிகளால் உச்சவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் படி ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 30 ரூபாவும், ஒரு இறாத்தல் பாணுக்கு எட்டு ரூபாவும், ஒருகிலோ நாட்டு அரிசி தரம் ஒன்றிற்கு 30 ரூபாவும் உச்சவிலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உணவுச் சாலைகளில் தோசை, இடியப்பம் என்பன ஒரு ரூபாவுக்கும், வடையொன்று மூன்று ரூபாவுக்கும் மேற்படாமல் விற்கப்படல் வேண்டுமெனப் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல்களை மீறி விற்பனை செய்தால் ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் எனவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

### காளுவன் சனசமூக நிலைய நிர்வாகிகள்

சுழிபுரம் காளுவன் மக்கள் முன்னேற்றச் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு டிசம்பர் 15-ம் திகதி நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்;- நா. விஜயநாதன், செயலர்:- ஆ. தவமணி, பொருளாளர்:- ம. உருத்திரசிங்கம், உபதலைவர்:- க சிவகுமார், உபசெயலர்:- து. றோமலதா,

செயற்குழு உறுப்பினர்களாக ஆ. கனகராஜா, மா ரவீந்திரராஜா. கி சற்குணம், தெ லோகேஸ்வரன், ஆ. செல்வரட்ணம்,ம தயாள

## தொலைக்கல்விப் பயிற்சி நெறி தெரிவான ஆசிரியர் விபரம்

யாழ் ஆசிரியர் தொலைக் கல்விப் பயிற்சி நெறிக்கென கடந்தமேமாதம்நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயிற்சி ஆரம்பவிழா இம்மாதம் 23-ம் திகதி காலை 9 மணிக்கு வேம்படிமகளிர் கல்லூரியில் யாழ் தலைமையில் நடைபெறும்.

1989 - 91-ம் ஆண்டு ஆசிரிய பயிலுநர்க்கான 5 நாள் தொடர்பு வகுப்புகளும் 23-ம் திகதி முதல் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

1990 - 92 ம் ஆண்டு ஆசிரிய பயிலுநர்களுக்கும் ஆரம்ப விழாவை அடுத்து 5 நாள் தொடர்பு வகுப்பு நடை

தலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

குணம், தெ லோகேஸ்வரன், ஆ. செல்வரட்ணம், மதயாள சோதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (34)

திகதி காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம்

விழாவை அடுத்து 5 நாள் தொடர்புறு வகுப்பு நடைபெறும்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்ட ஆசிரியர்களின் விபரம் வருமாறு :-

### ஆரம்பக் கற்கை நெறி

திருமதி என். சிவனேஸ்வரி வெற்றிலைக்கேணி றோ. க. த. க. செல்வி ஏ ஜி அரியராணி ஆரியவலை சி ரி. எம் எஸ். செல்வி எஸ். பவானந்தி வேலணை சரஸ்வதி வித்தி, செல்வி எஸ். சாந்தாம்பாள் வெற்றிலைக்கேணி றோ. க த க. திருமதி ஜீ விமலாதேவி சித்தன்கேணி கணேச வித்தி, திரு. எஸ் ஆனந்தசிவம் வன்னிக்குளம் ம. வி, செல்வி எஸ். ரஜினி பனங்கண்டி இந்து வித்தி, திரு. பி செல்வநாயகம் போக்கறுப்பு அ. த க பா, திருமதி எஸ். சுபத்திரா திலம் சித்தி விநாயகர் வித்தி. செல்வி ஜி. கல்யாணி ஊறணி வித்தி. செல்வி நா புஸ்பராணி நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி, திரு என். இரவிச்சந்திரன் கெற்போலி அ. த க. பா, செல்வி ரி. ஜமுனா மிருசுவில் அ. த க. பாடசாலை. (தொடரும்)

அன்றாட வயிற்றுப்பாட்டினைப் போக்குவதற்கும் தொழில் செய்ய அனுமதி கோரியும், நிவாரணம் கோரியும் பல சமுக சேவை ஸ்தாபனங்களுடன் தொடர்புகொள்ளும் என்று தலைவர் பெ. தேவராசா தெரிவித்துள்ளார். (34)

## வட, கிழக்கு

# வைத்திய மாணவர்க்கு கொழும்பில் பரீட்சை

அகதிகளாக கொழும்பு வந்துள்ள வைத்திய மாணவர்களுக்கு எதிர்வரும் 20-ம் 27-ம் திகதிகளில் கொழும்பில் பரீட்சை நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வன்செயல் காரணமாக கொழும்பு வந்துள்ள வைத்தியக் கல்லூரி வைத்திய மாணவர்களுக்கான முதலாண்டுப் பரீட்சை குறிப்பிட்ட தினங்களில் நடைபெறும் என்றும் அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு கல்வி, உயர்கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## விவசாயபீடம் நடவடிக்கை

# எருமை வளர்ப்பு பண்ணை கிளிநொச்சியில் ஆரம்பமாகும்

கிளிநொச்சி விவசாயபீடம் எருமை வளர்ப்புப் பண்ணை கால் நடை வளர்ப்பு மாதிரிப் பண்ணை, புல் விதைஉற்பத்தி வளர்ப்புத் திட்டம் என்பனவற்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

புதுமுறிப்பில் சுமார் 30 ஏக்கரில் எருமை வளர்ப்புப் பண்ணையும், முறிகண்டியில் நூறு ஏக்கரில் கால்நடை மாதிரிப்பண்ணையும் புல் வளர்ப்புத்திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேபோல நன்னீர் மீன் வளர்ப்பு மாதிரிப் பண்ணையும் ஒன்று ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (35)

# நிர்வாக சேவைப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும்

இலங்கை நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் 1991 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெறுமென்று தெரியவருகிறது

இப்போட்டிப் பரீட்சைகள் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி நடைபெறுமென்று முன்னர் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டபோதும், நாட்டிலுள்ள அமைதியற்ற சூழ்நிலை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது.

திறந்த போட்டிப்பரீட்சை 1991 ஜனவரி மாதம் 26ஆம் திகதியும், மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பெப்ரவரி மாதம் 09ஆம் திகதியும் நடைபெறுமென்று கொழும்புபரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான நிர்வாக சேவைப் பரீட்சை கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்றபோது யாழ் மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் இருந்த காரணத்தால் பெரும்பான்மையான பரீட்சார்த்திகள் கலந்து கொள்ளவில்லை என்பது தெரிந்தவிடயமே. (47)

# விண்ணப்பம் ஏற்கப்படுகிறது

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் அடுத்த கல்வியாண்டிற்குரிய விண்ணப்பங்கள் இம்மாதம் 28-ம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் பிரதிப் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

# இலங்கைக் கப்பலில் போதை வஸ்து!

இலங்கை அரசுக்குச் சொந்தமான 'லங்கா அமித்த' என்ற சரக்குக் கப்பலில் பணிபுரியும் ரஞ்சித் அத்துக்கோரலை என்ற இலங்கையரிடமிருந்து 4 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துவைப் பிரிட்டிஷ் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இங்கிலாந்தின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள பீலிக்ஸ்ரோவே என்ற துறைமுகத்தில் பொலிஸாரும் சுங்கப்பகுதியினரும் நடாத்திய திடீர் வேட்டையின்போதே அத்துக்கோரலை கைது செய்யப்பட்டார்.

அத்துக்கோரலையும் மேலும் நால்வரும் கைது செய்யப்பட்டு மஜிஸ்ற்ரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (38)

# உலக அரங்கில்

## சோமாலியா விமானப்படை தளம்மீது கெரில்லாக்கள் பாரிய தாக்குதல்!

மேற்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அரசின் விமானப்படைத்தளம் ஒன்றின் மீது சோமாலியா தேசிய இயக்கம்(S. N. M) என்ற கெரில்லா இயக்கம் நடாத்திய மிகப்பெரும் தாக்குதலில் மூன்று விமானப்படை விமானங்கள் தீப்பற்றி எரிந்தன.

பாலிடுப்லேய் விமானத்தளம் என அழைக்கப்படும் இத்தளம் சோமாலியா விமானப்படையின் மிகப்பெரும் விமானப்படைத் தளமாகும். பட்டேலா பிரதான வீதியில் இத்தளம் அமைந்துள்ளது.

தேசிய சோமாலியா கொங்கிரஸ் கட்சியின் ராணுவப் பிரிவான எஸ். என். எம் கெரில்லாக்கள் தற்போது தலைநகர் மொகடிசியோவில் இருந்து ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளனர். இவர்கள் சிறு சிறு பிரிவாக தற்போது நகரை நோக்கி நகருகின்றனர். இச்சமயத்திலேயே ஒரு பிரிவினர் விமானத்தளத்தின் மீது பாரிய தாக்குதலை நேற்று முன்தினம் தொடுத்துள்ளனர்.

விமானப்படையினருக்கு ஏற்பட்டுள்ள சேதம் சிறிய படையாக இருக்கும் சோமாலிய விமானப்படைக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சோமாலிய விமானப்படையின் அநேக விமானிகள் வெளிநாட்டவர்கள். இவர்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் டொலர் ஊதியமாக வழங்கப் டுகிறது. பிரிட்டிஷ் தயாரிப்பு ''ஹண்டர்'' விமானங்களை ஒட்டுவதற்காக இவர்கள் கடந்த மாதம் 13-ம் திகதி முதல் குத்தகை முறையில் ஒரு வருடத்திற்கு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

## எர்ஷாத்தை விசாரிக்க ஆணைக்குழு

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் தனது ஒன்பது வருடகால ஆட்சியின் போது புரிந்த ஊழல், லஞ்ச மோசடி என்பவற்றை விசாரிக்கும் முன்னாள் நீதிபதி ஒருவரைத்தலைவராகக் கொண்ட விசாரணை ஆணைக்குழு ஒன்றைஇடைக்கால அரசு அமைத்துள்ளது.

எதிர்க்கட்சியினரும், மாணவர்களும் எர்ஷாத் விசாரிக்கப்பட வேண்டும் என்று கொடுத்த நெருக்குதலைத் தொடர்ந்தே இவ்விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## கிணற்றில் இருந்த பெண்ணின் சடலம்

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலுக்கருகில் உள்ள வயல் பகுதியில் கிணறு ஒன்றில் நேற்று இளம் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

(33, ப-14, ப-1)

### மாங்குளத்தில்...

மாங்குளத்தில் மின்சார சபை அலுவலகம் ஒன்று முன்னர் செயற்பட்ட போதிலும் அவ் அலுவலகம் அங்கு தற்பொழுது இயங்குவதில்லையெனவும், அவ் அலுவலகத்திற்கு பொறுப்பான அதிகாரிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை யெனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## காலமானார்

### சைமன் தங்கம்மா சவிராசி

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சைமன் தங்கம்மா சவிராசி 15-12-90ல் அகால மரணமாகி

## ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு யாழ்,பிரஜைகள் குழு கடிதம்

# யாழ் குடாவின் ஏனைய ஆஸ்பத்திரிகளையும் பாதுகாப்பு வலயத்துள் கொண்டுவர வேண்டும்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி மீண்டும் திறக்கப்பட்டுள்ளபோதும் மோசமான மருந்துப்பற்றாக்குறை மற்றும் மின்சாரம் இன்மை, போக்குவரத்து வசதி முற்றாக ஸ்தம்பித்துள்ளதாலும் அநாவசிய உயிரிழப்புக்கள் தொடருகின்றன எனறு யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

ஜெனரேட்டர்களை இயக்கப் போதிய டீசல் இல்லை என்றும், ஆய்வு கூடப் பரிசோதனைகளுக்கு வாயு இல்லையென்றும், கர்ப்பிணிகளையும், நோயாளிகளையும் சைக்கிள்களிலும், மாட்டு வண்டிகளிலும் ஏற்றி வருவதால் நேரம் விணாகி அவர்கள் உயிரிழக்க நேரிடுகின்றது என்றும் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டு முடிவடையும் நிலையிலும் மூன்றாம் காலாண்டுக்குரிய மருந்துகள் கூட ஒழுங்காக வந்து சேரவில்லை.

ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து போதனா வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக நோயாளர்களைக் கொண்டுவர அம்புலன்ஸ் வண்டிகளுக்கு எரிபொருள் இல்லை.

குண்டு வீச்சாலும், ஷெல் தாக்குதலாலும் இறப்பவர்களில் 99 சதவீதமானவர்கள் சாதாரண பொதுமக்களே. உடன் வைத்திய உதவி கிடைக்காததால் பலர் இரத்தப் பெருக்கால் இறந்துள்ளார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலை பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டதுபோல ஏனைய ஆஸ்பத்திரிகளும் பாதுகாக்கப் படவேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவம்பர் மாதக் கட்டுநிதி கல்வித் திணைக்களம் வந்தது

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான நவம்பர் சம்பளக் கட்டுநிதி யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்ததை அடுத்து ஒவ்வொரு கோட்டங்களுக்கும் நேற்று பிரித்து வழங்கப்பட்டது

நவம்பர் மாத கட்டுநிதியில் குறிப்பிடத்தக்களவு தொகை குறைவாகவே வந்துள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன இருப்பினும் அதனை ஈடுசெய்யும் வகையில் மாற்றுவழி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதேவேளை ஆசிரியர்களுக்கான நவம்பர் மாதச் சம்பளம் தவிர்க்க முடியாத காரணங்களினால், காசோலைகளாகவே வழங்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## நான்கு மாதங்களுக்குரிய பொதுசன உதவிப்பணம் செயலகத்தில் வழங்கப்படும்

யாழ் அரச செயலகத்தின் சிறாப்பர் அலுவலகத்தால் வழங்கப்படுகின்ற பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் ஒருமித்து வழங்கப் படவுள்ளது.

ஆகஸ்ட், செப்டெம்பர், ஒட்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய மேற்படி கொடுப்பனவுகளை ஒரேமுறையில் வழங்க செயலக சிறாப்பர் அலுவலகமும், சமூக சேவை கிளையும் இணைந்து செயற்படுகின்றன. (47)

## கட்டாக்காலி நாய்கள் கிராமப்புறங்களில் அதிகம்

யாழ் மாநகரப் பகுதியில்கட்டாக்காலி நர்ய்கள் அழிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுவதால் நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் குறைந்துள்ளது.

இதேவேளை கிராமப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்திருப்பதைக் காண முடிகிறது. (33,ப24)

### ஒரு பொருளுக்குப்...

இம்தவேளை கூட்டுறவுச் சங்கங்களில பொருட்கள பற்றாக்குறை இருப்பின் அது பற்றி தனக்கு அறிவிக்க வேண்டும் எனவும் ஒரு பொருளுக்குப பதிலாக வேறு பொருட்களை வழங்கக் கூடாது எனவும் அறிவித்துள்ளார்.

கூடுதலான அளவு பொருட்கள் உளள சங்கங்சளில் இருந்து பற்றாக்குறையுளள சஙகஙகளுககு பொருட்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

எனவே மக்கள் அனைவருக்கும் உரிய முறையில் இவ் வநியோகத்தை வழங்க சகல சங்கங்களும், கிளை முகாமை

### பென்சன்...

இந்த விபரம் தெரியாது பலர் தினமும் செயலகத்துக்கு வீணாக அலைந்து திரிவதையும் காணமுடிகிறது. (66)

### வடக்குக்...

வடக்கிலுள்ள ஒரு பிரதான கல்வித் திணைக்கள மூத்த அதிகாரி மாகாணக் கல்விப் பணிப்பாளராக திருமலை செல்லவுள்ளதாகவும் அவ் விடத்துக்கு கிழக்குப் மாகா

## மகாஜனாக் கல்லூரி மீண்டும் ஜனவரி முதல் பழைய இடத்தில்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஜனவரி 2-ம் திகதி தொடக்கம் கல்லூரியின் சொந்த இடத்திலேயே இயங்கவுள்ளது கடந்த நவம்பர் 17 ஆம் திகதி தொடக்கம் இராணுவ நடவடிக்கையால் இயங்க முடியாது சிலநாட்கள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும், பின்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் இயங்கிவருகின்றது.

மாணவர் தொகை ஆயிரத்துக்கும்மேலாக அதிகரித்ததையடுத்து தொடர்ந்தும் பண்டத்தரிப்பில் இயங்க முடியாததாலும் பெற்றோரது வற்புறுத்தலாலும், அம்பனைப் பகுதியில் 'ஷெல்' தாக்குதல் குறைவாக இருப்பதாலும் மேற்படி கலலூரியிலேயே இயங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. க. நாகராசா தெரிவித்தார். (32, 48

## காரைநகர் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பான தாள்கள் வெளியில் விற்பனை

காரைநகர் வலந்தலை அரசினர் ஆஸ்பத்திரிக்கு மருந்துச்சிட்டை எழுதுவதற்குரிய பெருமளவு தாள்களை காரைநகர் மத்தி நலன் புரிச் சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

ஆனால் இத்தாள்கள் ஆஸ்பத்திரிக்கு வெளியே வைத்து 40 சதம் முதல் 75சதம் வரை விற்பனை செய்யப்படுகிறது. (ப-31)

### 10 ஆயிரத்துக்கும்...

செயலகத்திற்கு கிடைக்கப்பெற்று சகலருக்கும் இரண்டாயிரம் ரூபா வீதம் மரணச் செலவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (66)

## காலமானார்

### சைமன் தங்கம்மா சவிராசி

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சைமன் தங்கம்மா சவிராசி 15-12-90ல் அகால மரணமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற வஸ்ரியாம்பிள்ளை சைமனின் (ஓய்வுபெற்ற விகிதர் P. W. D.) அன்பு மனைவியும், சைமன் விக்ரர் (பெற்றா எசென்ஸ் சப்ளையேர்ஸ் யாழ்ப்பாணம்), சைமன் வேதநாயகம் (இலட்சுமி ஹோட்டல், வவுனியா), சைமன் அலோசியஸ் (சுவிஸ்), சைமன் றெஜினா, சைமன் செலஸ்ரீனா (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், வி. வியாற்றீஸ், வே. கமலா (R. D. H. S. திருகோணமலை), அ. புஸ்பராணி (சுவிஸ்), ச. சூசைதாசன், பொ. யோண் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வி. அலெக்ஸ் உதயகுமார் (சுவிஸ்), வி. செல்ரன் டெஸ்மக் குமார் (இத்தாலி), வி. சாந்தி சிறாணிகா, வே. றேமன் அன்ரோ (சுவிஸ்), வே. பேள், வே. ரகு, வே. கிறிஸ்ரி, அ. அசெம்ரா ஜீனா (சுவிஸ்), அ. இன்பென்ரா ஜெறினா (சுவிஸ்), சூ. சதிஸ்சகாயறாஜ், சூ. ஏஞ்சலின் நிரஞ்சலா, சூ. ஜெஸ்மின் ஜெயந்தா, யோ, அன்ரன் பிரசன்னாத் (சுவிஸ்), யோ. சுமங்கலா தாரிணி, யோ. அனுமலா தர்ஷினி (சுவிஸ்), யோ. அருண்ஜெயநாத் ஆகியோரின் பேத்தியும் ஆவார், அன்னாரின் பூதவுடல் 16-12-90 அன்று புனித சம்பேதுரு சம்பாவிலு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை.

தகவல்: சைமன் விக்ரர்.

12117

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 19-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

இருந்து பற்றாக்குறையுள்ள சங்கங்களுக்கு பொருட்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

எனவே மக்கள் அனைவருக்கும் உரிய முறையில் இவ் வநியோகத்தை வழங்க சகல சங்கங்களும், கிளை முகாமையாளர்களும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

(66)

### வடக்குக்...

வடக்கிலுள்ள ஒரு பிரதான கல்வித் திணைக்கள மூத்த அதிகாரி மாகாணக் கல்விப் பணிப்பாளராக திருமலை செல்லவுள்ளதாகவும் அவ்விடத்துக்கு கிழக்குப் மாகாணத்தில் கடமை புரிந்த அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(33)


# COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

## புதிய பிரிவு ஆரம்பம் 22-12-90

அனைவரும் சேரலாம்

21. 12. 90 க்கு முன்பாக நேரில் வரவும்

**Jaffna Central Academy**

(Regd. No. 12710)

(நகைமாளிகை அருகாமை)

உரும்பிராய் சந்தி - உரும்பிராய்

12118


### 10 ஆயிரத்துக்கும்...

செயலகத்திற்கு கிடைக்கப் பெற்று சகலருக்கும் இரண்டாயிரம் ரூபா வீதம் மரணச் செலவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(66)

சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

ஆனால் இத்தாள்கள் ஆஸ்பத்திரிக்கு வெளியே வைத்து 40 சதம் முதல் 75சதம் வரை விற்பனை செய்யப்படுகிறது.

(ப-31)

## காலமானார்

### பூதத்தம்பி குலராஜசிங்கம் (குலம் மாஷ்டர்)

சாவகச்சேரியைச் சேர்ந்த பூதத்தம்பி குலராஜசிங்கம் 18-12-90 செவ்வாய்க்கிழமை மறுமைக்குள் பிரவேசித்துவிட்டார். அன்னார் மேபிள் கண்மணியின் அன்புக் கணவரும், இராஜி, மாலா (ஆசிரியை நவீல்ட் பாடசாலை), சுரேஷ், ஷாமினி (மாலைதீவு). டினேஷ் (U.K), சுதேஷ், (காமன் தொழிற்சாலை கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஞ்சன் பீடில், தேவகுமார் (டோகா), பவானி (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), தேவபாலன் (மாலைதீவு), விஜியந்தி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், அகல்யா, நிரோஷன், மிதியா, சிந்தியா, வித்தியா, பிரதுஷ்சா, பிரவீன், விஜேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெயமணி கிருபைநாயகம் (ஆஸ்திரேலியா), ஜெயலட்சுமிவீடில், அன்னலட்சுமி, எவேட்ஸ், காலஞ்சென்றவர்கள் ஜெயவீரசிங்கம், தனபாலசிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் அன்னாரின் இறுதி ஆராதனை குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மாலா தேவகுமார்

புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.

12120